செ.வெ.எண்:54 நாள்:30.01.2019

# அரியலூர் மாவட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு தின உறுதிமொழி இன்று (30.01.2019) எடுக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுதந்திர போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, பின்னர் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி இஆப., அவர்கள்** வாசிக்க, அதனை தொடர்ந்து அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பின் தொடர்ந்து கூறி தீண்டாமை எதிர்ப்பு உறுதி மொழி எடுக்கப்பட்டது.

## தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

**“இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான் நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமூதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதை உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்”.**

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜ், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் அரசுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**